# ஆறந்தரப்
# படவேலை
# சமூகக்கல்வி

★

( புதியபாடத் திட்டம் )

ஆக்கியோர் :

க. குணராசா B. A Hons ( Cey. ) C. A. S.

கமலா குணராசா (B. A. Cey )

ஸ்ரீ லங்கா புத்தக சாலை, யாழ்ப்பாணம்

விலை ரூபா 4-50

முதலாம் பதிப்பு : ஜனவரி, 1979.
இரண்டாம் பதிப்பு : மே. 1979.
மூன்றாம் பதிப்பு : பெப்ரவரி 1981.
*(C) Mrs. K. Kunarasah, 82, Brown Road, Neeraviady, Jaffna.*
அச்சுப்பதிப்பு : விவேகானந்தா அச்சகம் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

விற்பனையாளர் :

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை வீதி

**யாழ்ப்பாணம்**

# ஆருந்தரப் படவேலை சமூகக் கல்வி

## படவேலைப் பாடத்திட்டம்

1. பாடசாலையின் நிலையமும் பாடசாலைக் கட்டிடத்தை மையமாகக் கொண்டு எட்டுத் திசைகளையும் அறிதல்.

2. பிரதேசத்தின் முக்கிய இடங்கள் பாடசாலையின் எத்திசையில் அமைந்துள்ளன என்பதைக் கண்டறிதல்.

3 வகுப்பறை, பாடசாலைக் கட்டடம், பாடசாலைத் தோட்டம் ஆகியவற்றை அளத்தலும், அவற்றின் படங்களை வரைதலும்.

4. அளவுத் திட்டம் — அறிமுகம்.

5. ஓர் அளவுத்திட்டத்திற்கமைய வகுப்பறை, பாடசாலைக் கட்டடம் ஆகியவற்றின் படங்களை வரைதல்.

6. கிராமத்தின் அல்லது நகரத்தின் படம் ஒன்றை அளவுத் திட்டத்திற்கமைய வரைந்து முக்கிய இடங்களைத் தூரத்திற்கேற்பக் குறிப்பிடுதல்.

7. இலங்கைப் படம் இலங்கையின் புறவுருவப் படத்தை வரைதல். இலங்கைப் படத்தைக் கையினால் வரையப் பழகுதல்.

8. இலங்கைப் படத்தில் கிராமம் அல்லது நகரம், அது அமைந்துள்ள மாவட்டம் என்பனவற்றைக் குறிப்பிடுதல்.


9. இலங்கைப் படத்தில் மலைப்பிரதேசத்திற்கும், தாழ்நிலத்திற்குமிடையேயுள்ள (சமவெளி) எல்லைக்கோட்டை வரைதல்.

## பயிற்சி ஒன்று

### விளக்கம்

# பாடசாலை வதிவிடம்

உங்கள் பாடசாலையின் சுற்றுடலை ஒரு வரைபடமாக வரைவீர்களா? வரைந்து பாருங்கள். உங்கள் பாடசாலையை மையமாகக் கொண்டு வரையுங்கள். மேலேயுள்ள படம், உங்களைப் போன்ற ஒரு மாணவன் வரைந்ததாகும், அம்மாணவனின் பெயர் சந்திரன்.




படம்: 1 பாடசாலை வதிவிடம்

இப்போது படத்தைப் பாருங்கள். சந்திரனின் பாடசாலை ஒரு பிரதான வீதிக்கு அருகே அமைந்துள்ளது. அப்பிரதான வீதி கிழக்கு மேற்காகச் செல்கின்றது. சந்திரனின் பாடசாலையைச் சூழ்ந்து, பிரதான வீதி, சிறுவீதி, ஒழுங்கை என்பன எல்லையிட்டுள்ளன. சந்திரனின் பாடசாலை நான்கு கட்டிடங்களை உடையது. அதில் ஒரு கட்டிடம் பெரியது. வீதிகளின் அருகுகளில் மக்கள் வாழும் வீடுகளுள்ளன. சந்திரனின் பாடசாலைக்கும் பிரதான வீதிக்கும் இடையில் வீடுகள் உள்ளன. பாடசாலைக்கு மேற்கே கோயில் ஒன்று உள்ளது. பாடசாலையை அடுத்து விளையாட்டு மைதானமும், கோயிலைச் சூழ்ந்து திறந்த வெளியுமுள்ளன. பாடசாலையின் வாசல் பிரதான வீதியில் இருக்கின்றது.

பாடசாலையில் ஒரு சிறு தோட்டம் உள்ளது. தோட்டத்தில் ஒரு கிணறும் காணப்படுகின்றது. கோயிலை அடுத்துப் பிறிதொரு கிணறும் உள்ளது. ஆங்காங்கே மரங்களும் தென்னை மரங்களும் வளர்ந்துள்ளன. தென்னந்தோட்டம் ஒன்று பாடசாலைக்குத் தென்புறத்தே உள்ளது.

மேற்கேயுள்ள சிறு வீதியை அடுத்து ஒரு வெள்ள வாய்க்கால் காணப்படுகின்றது.

இத்தகையதொரு படத்தை உங்கள் பாடசாலையை மையமாகக் கொண்டு வரைந்து பாருங்கள்.


பின்வரும் நீள்சதுரக் கூட்டிற்குள், உங்கள் பாடசாலையை வரைக. முதலில் உங்கள் வகுப்பறை அமைந்துள்ள பாடசாலைக் கட்டிடத்தைக் கீறிக் கொள்ளவும். பின்னர் உங்கள் பாடசாலையின் வேறு கட்டிடங்களை வரைந்து கொள்ளவும். உங்கள் பாடசாலையின் முன்னால் செல்லும் வீதியை அல்லது ஒழுங்கையை வரைந்து கொள்ளவும். உங்கள் பாடசாலை வளவிற்குள் காணப்படும் கிணறு, தோட்டம் என்பனவற்றையும் கீறிக் கொள்ளவும். மரங்களையும் கீறிக்கொள்க. சந்திரன் வரைந்த படத்திலுள்ளவாறு, குறியீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

### பயிற்சி இரண்டு

## திசை அறிதல்


உமது பாடசாலையின் சுற்றுடலைப் படமாக வரைவதற்குத் திசைகள் குறித்த அறிவு அவசியம். ஓவியம், புகைப்படம் தவிர்ந்த ஏனைய எந்தவொரு விளக்கப்படத்தையும் வரைவதற்கும், புரிந்து கொள்வதற்கும் திசைகள் குறித்த அறிவு தேவை.

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நில்லுங்கள். நின்றுகொண்டு உங்கள் கைகள் இரண்டையும் உங்கள் தோள்மட்டத்திற்கு நீட்டிக் கொள்ளுங்கள். இப்போது உங்கள் முகம் நோக்கியுள்ள திசை கிழக்காகும். உங்களது இடது கை சுட்டும் திசை வடக்காகும். உங்கள் வலது கரம் சுட்டும் திசை தெற்காகும் பின்பக்கமுள்ள திசை மேற்காகும்.




படம் 2: திசைகளை அறிதல்

விளக்கப் படங்களில் திசைகள் குறிப்பதற்கு ஒரு முறை பின்பற்றப்படுகின்றது. படம் 1 ஐப் பாருங்கள். அவ்விளக்கப்படத்தின் வலது மூலையில் ஓர் அம்புக்குறியும் 'வ' என்ற எழுத்தும் உள்ளன அல்லவா? 'வ' என்பது வடக்கைக் குறிக்கும். எனவே, ஒரு தாளின் (பேப்பர்) 'மேற்'பகுதி வடக்குத் திசையையும், 'கீழ்'ப்பகுதி தெற்குத் திசையையும், 'வலது' பகுதி கிழக்குத் திசையையும், 'இடது' பகுதி மேற்குத திசையையும் குறிக்கின்றன என்பதை நினைவிற் கொள்க.





பொதுவாக எட்டுத் திசைகளை நாம் தெளிவாகவும் சரியாகவும் தெரிந்துகொள்ள வேண்டும். அவை:

வடக்கு, தெற்கு. கிழக்கு, மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்பனவாம்.




இவ் வரைப்படத்தினை நோக்குக.
அதில் எட்டுத் திசைகளும்
காண்பிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் விளக்கப்படத்தினை அவதானித்து, வினாக்களுக்கு விடை தருக.




படம் : 3. பாடசாலை வதிவிடம்

1. பாடசாலைக் கட்டிடங்கள் எத்தனை உள்ளன? ______

2. பாடசாலைக்கு மேல்வருவன எத்திசையில் உள்ளன?
(i) சிறு வீதி ______ (ii) பிரதான வீதி ______ (iii) தென்னந் தோட்டம் (iv) ஒழுங்கை ______ (v) வாய்க்கால் ______

3. தோட்டத்தினுள் அமைந்திருக்கும் கிணற்றுக்கு மேல்வருவன எத்திசையில் உள்ளன?
(i) கோயில் ______ (ii) வாயில் ______ (iii) வீடுகள் ______
(iv) நாற்சந்தி ______ (v) ஒழுங்கையும் பிரதான வீதியும் சந்திக்கும் சந்தி ______

## குறியீடுகள்

**விளக்கம் :**


சந்திரன் வரைந்த பாடசாலேக்குரிய அமைவிடப் படத்தினை நோக்குக. அதில் பாடசாலே, வீடு. வீதி, ஒழுங்கை. கிணறு, மரம், தோட்டம், தென்னே, கோயில் என்பன சில குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

விளக்கப் படம் ஒன்றை வரைவதற்குக் குறியீடுகள் அவசியமாகும். இலங்கை நிலவளப் பகுதியினர், இலங்கையை விளக்கப்படமாக வரைவதற்குப் பல குறியீடுகளேயும் எழுத்துக் களேயும் பயன்படுத்தியுள்ளனர்.

**அவை :**

1. நதி நீல நிறத்தால் வரையப்படும். பிரதான வீதி சிவப்பு நிறத்தாலும், சிறு வீதி கபில நிறத்தாலும் வரையப்படும். புகையிரதப் பாதை கறுப்பு நிறத்தால் வரையப் படும். வண்டில் பாதை (ஒழுங்கை) ... ——— ... இவ்வாறும், நடை பாதை... . ...... இவ்வாறும் வரையப்படுகின்றன.

2. ஏனேய வழக்கக் குறியீடுகள் வருமாறு :



- மாகாண எல்லே
- மாவட்ட எல்லே
- உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லே
- கிராமசேவகர் பிரிவு எல்லே
- மாநகர, பட்டினசபை எல்லே
- கிறித்தவ ஆலயம்
- புத்தகோயில்
- இந்துக் கோயில்
- பள்ளிவாசல்
- கலங்கரை விளக்கம்
- பூங்கா
- வெளியரும்புப்பாறை
- நெல் வயல் (பச்சை நிறம்)
- பாழடைந்த நெல் வயல்

3. பின்வருப் [illegible] யிர்கள் கபில நிறத்தின் மீது எழுத்திட்டுக் காண்பிக்கப்படும்.

| T | ... ... ... தேயிலே |
| R | ... ... ... றப்பர் |
| C | ... ... ... தென்னே |
| CIN | ... ... ... கறுவா |
| COA | ... ... ... கொக்கோ |
| CIT | ... ... ... சித்திரநெல்லா |
| TOB | ... ... ... புகையிலே |
| G | ... ... ... கிராமத்தோட்டம் |


4. பின்வரும் அரசாங்கக் கட்டிடங்கள் பின்வரும் எழுத்துக்கள் மூலம் காட்டப்படும்.

R.H ... ... விடுதி வீடு
P ... ... ... தபாற்கந்தோர்
P ... ... உபதபாற்கந்தோர்
P.S ... பொலிஸ் நிலேயம்
C B ... ... ... அரசாங்க மாளிகை
PW ... ... பொ. வே. ப. (P.W.D )
H ... ... ஆசுப்பத்திரி
D ... ... வைத்தியசாலே
B ... ... . பங்களா
F ... ... தொழிற்சாலே
S . . பாடசாலே
Amb ... ... அம்பலம் (மடம்)
R.C ... கிராமக்கோடு
▬ ... ... ... நிரந்தரக் கட்டிடம் (குடியிருப்பு)

## பயிற்சி : மூன்று

உங்கள் பாடசாலைச் சுற்றுடலை விளக்கப்படமாக வரைந்தீர்கள். அதைப்போல உங்கள் ஊரை விளக்கப்படமாக வரைய முடியுமா ? பின்வரும் விளக்கப் படத்தைப் பாருங்கள். வவுனியாவைச் சேர்ந்த ஒரு பாடசாலை மாணவன் தன் கிராமத்தை விளக்கப்படமாக வரைந்துள்ளான்.

இது ஒரு குளக்குடியிருப்பு ஆகும். குளத்தை ஆதாரமாகக் கொண்டு மக்கள் இங்கு குடியேறியுள்ளனர். இப்படம் குறிக்கும் பிரதேசத்தில் பெரிய குளம் ஒன்றும், சிறியகுளம் ஒன்றும் காணப்படுகின்றன. இக்குளங்களில் மதகுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சல் கால்வாய்கள் வயல்களுக்கு நீரை வழங்குகின்றன. குளங்களுக்கு அருகாமையில் உள்ள உயரமான நிலப் பரப்பில் வீடுகளும், வீட்டுத் தோட்டங்களும் உள்ளன. குளங்களுக்குச் சற்று விலகியுள்ள தாழ்வான பரப்புக்கள் நெல் வயல்களாக அமைந்துள்ளன. வீதிகள் இக்குளக் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தின் கிழக்குப் பாகத்தில் காடுகள் காணப்படுகின்றன.





படம் : 4 குளக்கிராமம் ஒன்று

1. பின்வருவனவற்றின் எண்ணிக்கை யாவை ?
   - (i) வீதிகள் ………………… (ii) வீடுகள் ………………
   - (iii) வயல்கள் ……………… (iv) கால்வாய்கள் ………
   - (v) குளங்கள் …… (vi) ஒற்றையடிப் பாதைகள்
2. பெரிய குளத்திற்கு எத்திசையில் பின்வருவன அமைந்துள்ளன ?
   - (i) தோட்டம் ……………… (ii) சிறிய குளம்
   - (iii) காடு ……
3. வீதிகள் எந்த எந்தச் திசைகளில் அமைந்துள்ளன ? சரியானவற்றிற்கு '√' என்ற அடையாளமிடுக.
   - (i) வடக்குத் தெற்காக ☐
   - (ii) வடகிழக்கு தென்மேற்காக ☐
   - (iii) கிழக்கு மேற்காக ☐
   - (iv) வடமேற்கு தென்கிழக்காக ☐
   - (v) கிழக்கு வடக்காக ☐

## பயிற்சி : நான்கு

பின்வரும் விளக்கப்படத்தை அவதானிக்கவும். அப்படப் பிரதேசத்தின் மத்தியில் ஒரு நீளமான பாறைக்குன்று அமைந்துள்ளது. அக்குன்று 100 அடிக்குமேல் உயரமானது. அக்குன்று சமமான உயரமுடைய கோடுகளால் வரைந்து காட்டப்பட்டுள்ளது. (சமவுயரக் கோடுகள்) ஆறு ஒன்று அக்குன்றில் உற்பத்தியாகிப் பாய்கின்றது.




(அ) 1. பிரதேசத்தின் மத்தியிலுள்ள குன்றினை நிறந்தீட்டிக் காட்டுக.
2. வீதியைச் சிகப்பு நிறத்தால் வரைக.
3. குளத்திற்கு நீல நிறம் தீட்டுக.
4. கோயிலையும் பாடசாலையையும் இணைத்து ஒரு வீதி கீறுக.
5. புள்ளிக் கோட்டினால் காட்டப்பட்டுள்ள ஆற்றை நீலநிறத்தால் கீறுக.

(ஆ) 1. 'அ' என்பது ஒரு கிராமம். அக்கிராமத்திற்கு எத்திசைகளில் மேல் வருவன அமைந்துள்ளன.

(அ) கோயில் ..............................

(ஆ) மரம் ..............................

(இ) குளம் ..............................

(ஈ) பாடசாலை ..............................

(உ) ஆறு ..............................

(இ) நதி எங்கு உற்பத்தியாகி எத்திசையாகப் பாய்கிறது? ..............................

..............................

(ஈ) வீதி எத்திசையிலிருந்து எத்திசை வரை அமைந்துள்ளது? ..............................

..............................

## பயிற்சி : ஐந்து

# அளவுத் திட்டம்

அளவுத் திட்டம் என்றால் என்ன ?

நீங்கள் புகைப்பட ஸ்ருடியோவிற்குச் சென்று உங்களைப் புகைப்படமாக எடுத்துக் கொள்கின்றீர்கள் .4 அடி உயரமான உங்களை 4 அங்குலப் புகைப்படமாக அவர்கள் எடுத்துத் தருகின்றார்கள். அப்புகைப்படத்தில் இருப்பது நீங்கள்தான். ஆனால், ஒரு அளவுத்திட்டத் திற்கு இணங்க, சிறிதாக்கப்பட்டுள்ளீர்கள். புகைப்படத்திலுள்ள 1 அங்குலம், உங்களில் 1 அடியைக் குறிக்கின்றது. ஆகவே அளவுத் திட்டம் என்ன ?

1 அங்குலம் = 1 அடி



அருகிலுள்ள இந்தச் சித்திரத்தைப் பாருங்கள். 6 அடிகள் உயரமான மனிதர்கள் இதில் 3 அங்குலங் களாக வரையப்பட்டிருக்கின்றனர். அவ்வாறாயின் அளவுத்திட்டம் யாது ?

ஓவியத்திலுள்ள 3 அங்குலங்கள் = 6 அடிகள்


3 அங் = 6 அடி
1 அங் = 2 அடி
1 அங் = 24 அங்குலம்

ஒரு படத்தின் அளவுத்திட்டம் என்பது என்ன ? ஒரு பிரதேசம் நான்கு மைல் நீளம், நான்கு மைல் அகலமானது என எடுத்துக்கொள்வோம். பதினாறு சதுரமைல் பரப்பான அப்பிரதேசத்தை ஒரு தாளில் வரையும்போது, அதேயளவு பரப்பில் வரைந்துவிட முடியாது. ஏதோ ஒரு அளவிற்குச் சுருக்கியே வரைய வேண்டும். உதாரணமாக, அப்பதினாறு சதுர மைல் பரப்பை, நாம் பதினாறு சதுர அங்குலங்களாக வரைந்து கொள்வோம். அப்போது படத்திலுள்ள ஒரு அங்குல நீளம், புவிப்பரப்பிலுள்ள ஒரு மைல் நீளத்திற்குச் சமனாகிறது.

1 அங்குலம் = 1 மைல்
1 அங்குலம் = 63,360 அங்குலம்.

எனவே, ஒரு படத்தில் அளவுத்திட்டம் என்பது, படத்திலுள்ள ஒரு தூரத்திற்கும், அப்படம் சுட்டுகின்ற புவி மேற்பரப்பின் ஒரு தூரத்திற்கும் இடையேயுள்ள இணைப்பினைக் குறிப்பதாகும்.

மேல்வரும் புகைப்படத்தைப் பாருங்கள். வானவெளியிலிருந்து எடுத்த பூமியின் தோறப் படம் இதுவாகும்.




இப்படத்தில், பூமி 2 அங்குல விட்டமுடைய கோளமாகத் தெரிகின்றது. உண்மையில் பூமியின் விட்டம் ஏறத்தாழ 8000 மைல்களாகும். (7929 மைல் சரியான அளவு ). 8000 மைல்கள் விட்டத்தை 2 அங்குல விட்டமாக இப்படம் காட்டுகின்றது. அப்படியாயின் அளவுத் திட்டம் என்ன?

2 அங். = 8000 மைல்

1 அங். = 4000 மைல்

படத்திலுள்ள 1 அங்குல விட்டம், பூமியில் 4000 மைல்கள் விட்டமாகும்.

பின்வரும், விளக்கப்படத்தை நோக்குவோம்.




இப்படத்தின் அளவுத்திட்டம் 1 அங்குலம் = 40 அடிகளாகும் அதாவது படத்திலுள்ள 1 அங்குலம் நிலத்தில் 40 அடிகளைக் குறிக்கின்றது. அவ்வாறுயின்:—

1. பிரதான வீதியின் நீளம் எத்தனை அடிகள் ?


அடிமட்டத்தால் படத்திலுள்ள பிரதான வீதியின்நீளத்தை அளந்து பார்க்கவும். அளக்கில் 5 அங்குலமாகும். எனவே, வீதியின் நீளம், $5 \times 40 = 200$ அடிகளாகும்.

2. (அ) பாடசாலை அமைந்திருக்கும் காணியின் நீளம் எத்தனை அடிகள் ?..................

(ஆ) பாடசாலை அமைந்திருக்கும் காணியின் அகலம் எத்தனை அடிகள் ?..................

## பயிற்சி : ஆறு

பின்வரும் விளக்கப்படத்தைப் பார்க்கவும். ஒரு பாடசாலையின் வகுப்பறைகள் உட்படக் கட்டிடங்கள் யாவும் வரையப்பட்டுள்ளன. ஆனால் ஒரு அளவுத்திட்டப்படி அவை வரையப் பட்டிருக்கின்றன.




மேற்படி பாடசாலை அமைவிடம் 1 அங்குலம் = 40 அடி என்ற அளவுத் திட்டப்படி வரையப்பட்டிருக்கின்றது.


1. வடக்குத் தெற்காக அமைந்திருக்கும் பாடசாலைக் கட்டிடத்தின் அகல, நீளம் யாவை?
   அகலம் ............ நீளம் ............
2. கிழக்கு–மேற்காக அமைந்திருக்கும் பாடசாலைக் கட்டிடத்தின் அகல, நீளம் யாவை ?
   நீளம் ............ அகலம் ............
3. ஆறும் வகுப்பறையின் அகல, நீளம் யாவை ? நீளம் ............ அகலம் ............
4. விஞ்ஞான கூடத்தின் பரப்பு எத்தனை சதுர அடி ? பரப்பு ............
5. பாடசாலைக் காணியின் நீளம் எத்தனை அடிகள் ? அகலம் எத்தனை அடிகள் ?
   நீளம் ............ அகலம் ............
6. பெரிய விருந்தையின் அகல நீளம் யாவை ? நீளம் ............ அகலம் ............
7. பாடசாலையின் வெளிக்கதவின் அகலம் யாது ? ............
8. அ–என்ற மரத்திற்கும் ஆ–என்ற மரத்திற்கும் இடையிலான தூரம் எத்தனை அடி ? ............
9. பாடசாலை அலுவலகம், வெளிக்கதவிலிருந்து எத்தனை அடி தூரத்திலுள்ளது? ............
10. விளையாட்டு மைதானத்தின் சுற்றளவு எத்தனை அடி ? ............

**குறிப்பு :** இவ்வாறே உங்கள் பாடசாலையையும் வரைந்து கொள்க. ஒவ்வொரு வகுப்பறைகளின் நீள, அகலங்களைக் குறிப்பெடுத்த பின் வரையவும்.

## பயிற்சி : ஏழு


**இலங்கைப் புறவுருவப் படத்தை வரைதல்.**

இலக்கம் 1–இலிருந்து 32 வரையுள்ள இலக்கங்களை இணைக்கவும். நமது இலங்கையின் புறவுருவம் உருவாகும்.



## பயிற்சி : எட்டு


(அ) சதுரக் கோடுகளுள் காணப்படும் இலங்கைப் புறவுருவப் படத்தினை ஒவ்வொரு சதுரக் கோடாகப் பார்த்து; அந்த அந்தச் சதுரத்தினுள் வரைந்துகொள்ளவும்.



(ஆ) புள்ளிகளை இணைத்துக் கீறவும்,



(இ) முறிகோடுகளை இணைத்துக்கீறவும்



## பயிற்சி : ஒன்பது

**தரைத்தோற்றம் :**

இவ் விளக்கப் படத்தை அவதானிக்கவும். இலங்கையின் தரைத்தோற்றத்தைக் குறிக்கின்றது, புள்ளிக்கோடுகளால் 1000 அடிக்கு மேற்பட்ட உயரமுடைய இலங்கையின் மலைநாடும், இலங்கையைச் சூழ்ந்திருக்கும் தாழ்நிலங்களும், நதிகளும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.




1. புறவுருவத்தைப் பென்சிலால் கீறுக.
2. 1000' மேற்பட்ட மலைநாட்டிற்குக் கபிலநிறம் தீட்டுக.
3. நதிகளை நீல நிறத்தால் வரைக.
4. பின்வரும் பெயர்களை உரிய இலக்கமிடப்பட்ட இடங்களில் எழுதுக.

   1. பேதுருதாலகால
   2. மகாவலிகங்கை
   3. தெதுறுஓயா
   4. வளவகங்கை
   5. யாழ்ப்பாணம்
   6. வவுனியா
   7. திருகோணமலை
   8. மட்டக்களப்பு
   9. மன்னார்
   10. கொழும்பு
   11. களனிகங்கை
   12. அருவியாறு

## பயிற்சி : பத்து



**வரைக :**

ஒரு பிரதிபண்ணிப் பேப்பரை (ரிசுப் பேப்பரை) எடுத்து, மேலேயுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தின்மீது வைத்துப் பிரதிபண்ணிக் கொள்ளவும். பின்னர் அதனை வேறொரு தாளில் வைத்துப் பதிவு செய்து கொள்ளவும். பதிவைப் பென்சிலால் வரைந்து கொள்க இலங்கைப் புறவுருவப் படம் உருவாகும்.

## பயிற்சி : பதினொன்று



மேலுள்ள புறவுருவப்படம் யாழ்ப்பாணக் குடாநாடாகும். அதில் குறித்துப் பெயரிடுக.


(அ) கடல் பரப்புக்கு நீலநிறந் தீட்டுக.

(ஆ) யாழ்ப்பாணக் கடல்நீரேரி, தொண்டைமானாறு கடல்நீரேரி.

(இ) யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஆனையிறவு.

(ஈ) நெடுந்தீவு, வேலணை, காரைநகர், நயினாதீவு.

## பயிற்சி : பன்னிரண்டு




மேலுள்ள விளக்கப்படத்தில் காணப்படும் இலக்கங்களுக்குரிய பெயர்களை உரிய இடங்களில் எழுதுக.

( அ ) 1 என இலக்கமிடப்பட்டுள்ள நதியின் பெயர்


( ஆ ) 2 என இலக்கமிடப்பட்டுள்ள மலையின் பெயர்.

( இ ) 3, 9 என இலக்கமிடப்பட்டுள்ள குளங்களின் பெயர்கள்.

( ஈ ) 4, 6, 7, 8, 10 எனும் இலக்கமிடப்பட்டுள்ள நகர்களின் பெயர்கள்.

( உ ) 5 எனும் இலக்கமிடப்பட்டுள்ள தீவின் பெயர்.

## பயிற்சி : பதின்மூன்று



குறித்துப் பெயரிடுக :


(அ) 1000 அடி சமவுயரக் கோட்டினை வரைந்து மலைநாட்டைக் காட்டுக.

(ஆ) மன்னார்த் தீவைக் குறித்துப் பெயரிடுக.

(இ) தென்மேல் பருவக்காற்றை அது வீசும் திசையுடன் குறித்துப் பெயரிடுக.

(ஈ) வட தாழ்நிலத்தை உரிய எல்லைகளுடன் குறித்துக் காட்டுக.

## பயிற்சி : பதினான்கு




மேலுள்ள படத்தில் குறித்துள்ளவைக்கும், இலக்கமிடப்பட்டவைக்கும் அவற்றிற்குரிய பெயர்களை உரிய இடங்களில் எழுதுக

1. நதிகளின் பெயர்களை எழுதுக
2. மலைச்சிகரங்களின் பெயர்களை ( 20, 21, 22, 23 ) எழுதுக.
3. இலக்கமிடப்பட்டுள்ள நகர்களின் பெயர்களை எழுதுக.
4. அம்புக்குறியால் காட்டப்பட்டிருக்கும் காற்றுக்களின் பெயர்களைத் தருக.

## பயிற்சி : பதினைந்து

கீழுள்ள சதுரக் கூட்டிற்குள் இலங்கைப் புறவுருவப்படம் ஒன்றினை வரைக.

குறித்துப் பெயரிடுக.

1. உமது கிராமம் அல்லது நகரம். 2. ஒரு மலை. 3. ஒரு குளம். 4. ஒரு நதி. 5. ஒரு கடல் நீரேரி; 6. ஒரு தீவு. 7. ஒரு துறைமுகம். 8. இலங்கையின் தலைநகரம். 9. ஒரு காற்று. 10. ஒரு நகரம்.


## பயிற்சி : பதினாறு



**குறித்துப் பெயரிடுக :**

சிவனொளிபாதமலை, பேதுருதாலகாலை, நமுனகுல, மகாவலிகங்கை, களனிகங்கை, மகாஓயா, களுகங்கை, றக்குவானை, காலஓயா, வளவகங்கை, யாழ்ப்பாணம், திருகோணமலை, நீர்கொழும்பு, புத்தளக் கடனீரேரி.

## பயிற்சி : பதினேழு



**மேல்வரும் படத்தில் பின்வருவனவற்றைப் பெயரிடுக.**


(i) மகாவலிகங்கை, களனிகங்கை, வளவகங்கை, கல்லோயா, அருவியாறு.

(ii) பேதுருதாலகாலை, சிவனொளிபாதமலை, கிரிகாலப்பொத்தை, நமுனகுல, கதிர்காமக் குன்று.

(iii) பராக்கிரம சமுத்திரம். மின்னேரியா வாவி, யழ்ப்பாணக் கடல்நீரேரி, புத்தளக் கடல்நீரேரி, மன்னார் தீவு.

(iv) யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை.


உலகம்
தரைத்தோற்றம்
அகலக்கோடுகளும் நெடுங்கோடுகளும்
மலைத்தொடர்
மேட்டுநிலம்
தாழ்நிலம்
ஆர்க்டிக் சமுத்திரம்
பசுபிக் சமுத்திரம்
அத்திலாந்திக் சமுத்திரம்
இந்து சமுத்திரம்
அந்தாட்டிக் சமுத்திரம்
அந்தாட்டிக்கா
வடஅமெரிக்கா
தென்அமெரிக்கா
ஐரோப்பா
ஆசியா
ஆபிரிக்கா
அவுஸ்திரேலியா
கிறீன்லாந்து
ஐஸ்லாந்து
சைபீரியா
சகாரா
இந்தியா
அராபிக்கடல்
வங்காள விரிகுடா
மத்தியதரைக் கடல்
கருங்கடல்
வடகடல்
பெரிங்கடல்
யப்பான்
தீபெத்
இமயமலை
கரிபியன்கடல்
மத்தியகோடு
கடகக்கோடு
மகரக்கோடு
கிறீனிச்சுக்கோடு
நன்னம்பிக்கைமுனை
மடகஸ்கார்
சுமாத்திரா
போர்னியோ
நியூகினி
நியூசிலாந்து
லபிறடோர்
நியூபவுன்லாந்து
அமேசன்
கலகாரி
கினியா விரிகுடா
பிஸ்கே விரிகுடா



இலங்கை
தரைத்தோற்றம்
40 மைல்
யாழ்ப்பாணம்
மன்னார்
வவுனியா
திருகோணமலை
அநுராதபுரம்
புத்தளம்
சிலாபம்
குருநாகல்
நீர்கொழும்பு
கொழும்பு
களுத்துறை
இரத்தினபுரி
காலி
மாத்தறை
அம்பாந்தோட்டை
மட்டக்களப்பு
கதிர்காமக் குன்று
மா ஓயா
கால ஓயா
மீ ஓயா
மகா ஓயா
கல்லோயா
வில்ல ஓயா
சேனைக்க சமுத்திரம்
1 அபடீன் நீர்வீழ்ச்சி
2 லக்சபான „
3 டேவன் „
4 சென் கௌியர் „
5 ரமீபொடை „
6 துன்கிந்தை „
80°
81°
82°
9°
8°
7°
6°





வட மாகாணம்




மன்னார் மாவட்டம்





வவுனியா - முல்லைத்தீவு மாவட்டம்





திருகோணமலை மாவட்டம்


நீர்கொழும்பு
கந்தானை
கெந்தலை
வத்தளை
கொழும்பு
களனியா
மிரிகாண
பன்னிப்பிட்டி
கொட்டாவை
பாதுக்க
கோணப்பொலை
பண்டாரகம
கொறனை
கோவின்ன
புளத்சிங்கள
அங்குருவத்தோட்டை
கலப்பாத்தை
மகாகமம்
நேபொடை
பிம்புரை
அகலவத்தை
மதுகாமம்
பயாகலை
மக்கோனை
பேருவலை
அளுத்கமம்
கடவத்தை
வெலிவேரிய
கடாவதுறை
பேலவத்தை

மேல் மாகாணம்





புத்தள மாவட்டம்




மட்டக்களப்பு மாவட்டம்

# இலங்கையின் குடாக்கள், கடனீரேரிகள், முனைகள்



## ஏனைய சமூகக்கல்வி நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 6 | 1. | சமூகக்கல்வி - 6 | 5-50 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 4-80 |
| | 3. | ஆறாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 3-50 |
| 7 | 1. | சமூகக்கல்வி 7. | 4-60 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 6-00 |
| | 3. | ஏழாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 5-40 |
| 8 | 1. | சமூகக்கல்வி - 8. ( முதலாம் பருவம் ) | 4-80 |
| | 2. | சமூகக்கல்விப் பயிற்சிகள் (வினாவிடை) | (அச்சில்) |
| | 3. | எட்டாந்தரப் படவேலை - சமூகக்கல்வி | 6-50 |
| 9<br>10 | 1. | சமூகக்கல்வி - 9. | 9-50 |
| | 2. | புதிய சமூகக்கல்வி - 10. | 12-00 |
| | 3. | சமூகக்கல்விப் பயிற்சிகள் ( வினாவிடை ) | 8-40 |
| | 4. | சமூகக்கல்விப் படவேலைப் பயிற்சிகள் | 12-00 |


— விபரங்களுக்கு —

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி : யாழ்ப்பாணம்